பக்கங்கள் 12

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 31 புதன்கிழமை 16.08.2023 அதிர்வு 16

## மின்சாரக் கம்பியில் சிக்கி குடும்பப் பெண் உயிரிழப்பு

மின்சாரக் கம்பியில் சிக்கிக் குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

பதுளை மாவட்டம், ஹல்துமுல்ல, மலடோல பிரதேசத்தில் காட்டு 04



## மீண்டும் அரியணை ஏறுவார் ரணில் மூவின மக்களின் பேராதரவு உறுதி!



### அமைச்சர் ஹரீன் அதீத நம்பிக்கை

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவது நிச்சயம். அவருக்கு நிகர் வேறு எவரும் இல்லை. மூவின மக்களின் அமோக வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதி கதிரையில் அமர்வது உறுதி." 04

## '13'ஐ நீக்கினால் நாடு பற்றி எரியும்

### டிலான் பெரேரா எம்.பி. எச்சரிக்கை

### அரசியல் 'கேம்'களும் வேண்டாமாம்



கொழும்பு, ஓகஸ்ட் 16

அரசமைப்பில் இருந்து 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் இந்நாடு பற்றி எரியக்கூடும் என்று டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார். 04

## இனவாதத்தைக் கக்கி தமிழரைச் சீண்டாதீர்கள்

### தெற்கு அரசியல்வாதிகளுக்கு ராஜித பகிரங்க எச்சரிக்கை



"இனவாத, மதவாதக் கருத்துக்களைத் தெரிவித்து வடக்கு, கிழக்கு தமிழர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாம் என்று தெற்கு அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

"கொடூரப் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழர்கள் நிம்மதியான வாழ்வையே விரும்புகின்றார்கள். 04

### மரம் வேரோடு சாய்ந்து விழுந்ததால்

## தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் பாதுகாப்பு அதிகாரி பரிதாப உயிரிழப்பு

தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் பிரதான பாதுகாப்பு அதிகாரி பரிதாபகரமாகச் சாவடைந்துள்ளார்.

மரம் ஒன்று வேரோடு சாய்ந்து மின் 04

## பல்கலைக்கழக மாணவன் வீட்டிலிருந்து சடலமாக மீட்பு

பல்கலைக்கழக மாணவன் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

களனிப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 23 வயதுடைய மாணவனே நேற்று இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 04

## சுகாதார அமைச்சுக்கு முன்பாக மருத்துவ ஊழியர் ஆர்ப்பாட்டம்!



நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையின் ஊழியர்கள் குழுவொன்று சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

2014ஆம் ஆண்டு நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் உரிய முறையில் சம்பளம் வழங்கப்படவில்லை எனவும் மேலதிக கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# குப்பை மேட்டுக்கு உணவு தேடி திரண்டு வரும் யானைக் கூட்டம்

யானைகள் அருகில் உள்ள விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகளை அச்சுறுத்தி வருகின்றன.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட அஷ்ரப் நகர் பள்ளக்காட்டுப் பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் டசின் கணக்கான யானைகள் வருகை தந்து உண்டு வருகின்றன.

சில வேளை அருகில் உள்ள பொது மக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிப்பதுடன் விவசாய நிலங்களையும் அவை கபளீகரம் செய்கின்றன.

இந்தப் பகுதியில் தினமும் காரைதீவு, கல்முனை, அக்கரைப்பற்று, நிந்தவூர் உள்ளிட்ட பிரதேசங்களில் இருந்து குப்பைகள் வாகனங்கள் மூலம் கொண்டுவரப்பட்டு கொட்டப்படுகின்றன. அம்பாறை பிராந்தியத்தில் அன்றாடம் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் அநேகமானவை இந்த இடத்திலேயே கொட்டப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.



இதனால் மலைபோல் குவிந்துள்ள குப்பைகளை உண்ண தினமும் யானைகள் வருகின்றன.

மேலும், கடந்த காலங்களில் இப்பகுதியில் பிளாஸ்டிக் குப்பைகளை உட்கொண்ட இரண்டு யானைகள் உயிரிழந்திருந்தன.

கடந்த 8 ஆண்டுகளில் 20 யானைகள் குப்பைகளிலுள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் பொருடள்களை சாப்பிட்டு இறந்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் திறந்தவெளிக் குப்பை மேடுகளில் பிளாஸ்டிக், பொலிதீன் கழிவுகள் தேங்குவதாலும் அப்பகுதியில் அதிக யானைகள் உயிரிழக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்த யானைகளைப் பரிசோதித்த போது குப்பை மேட்டில் இருந்து பெருமளவிலான அழியாத பிளாஸ்டிக் பொருள்களை அவை விழுங்கியுள்ளன எனவும், யானைகள் சாப்பிட்டு ஜீரணிக்கும் சாதாரண உணவு எதுவும் குப்பை மேடுகளில் பொதுவாகக் காணப்படுவதில்லை எனவும் வன விலங்கு கால்நடை வைத்தியர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# களுதாவளையில் கடலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட களுதாவளை பிரதேசத்தில் கடலுக்கு சென்றவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

சிறி முருகன் கோயில் வீதி களுதாவளை பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான மரியசூசை தேவராசா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த 10 ஆம் திகதி நண்பருடன் களுதாவளை பிரதேசத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிப்பதற்காக இவர் சென்றிருந்தார். அன்றிரவு மீன் பிடித்து விட்டு தங்களது படகில் நித்திரை செய்து விட்டு சக நண்பர் நித்திரை விட்டு எழுந்து பார்த்த போது இந்நபர் காணமல் போயிருந்தார். பின்னர் கடல் பிரதேசத்தில் சக மீனவர்கள் தேடிச்சென்றபோது சற்று தொலைவில் கடல் பிரதேசத்தில் இருந்து சடலமாக அவர் மீட்ப்பட்டார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி நீதிவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் பிரேதத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# 13 ஆம் திருத்தம் தொடர்பான தேசிய காங்கிரஸின் முன்மொழிவு ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பு



(ஏயெஸ் மௌலானா, கே. எ. ஹமீட் )

அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் தொடர்பான தேசிய காங்கிரஸின் முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையை அதன் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை (15) மாலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இவ்வறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தேசிய காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் டாக்டர் ஏ. உதுமாலெப்பை, பொருளாளர் ஜே.எம். வஸீர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடுத்திருந்த வேண்டுகோளை ஏற்றே தேசிய காங்கிரஸ் தனது முன்மொழிவுகளை சமர்ப்பித்திருக்கிறது.

இந்த முன்மொழிவுகள் பற்றி விரைவில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் என்று கட்சியின் தலைவர் ஏ.எல். எம். அதாஉல்லா தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 13 ஆம் திருத்த சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித் தனியாக பிரிந்திருக்க வேண்டும் எனவும் பொதுவாக மாகாண சபை முறைமை அவசியமற்றது எனவும் அது இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும் அதாஉல்லா கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீட்டுத்தோட்டப் போட்டிக்கு விதைகள் விநியோகம்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மாணாக்க உழவர் என்னும் வீட்டுத் தோட்டப் போட்டியை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக் குறை, நஞ்சற்ற உணவுற்பத்தி, மாணவர்களை மனஅழுத்தங்களில் இருந்து விடுவித்தல் ஆகியவனவற்றை நோக்காகக் கொண்டு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் போட்டி இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தற்போது இலவசமாக விதைப்பொதிகளை வழங்கி வருகின்றது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் யாழ்ப்பாணம், அரசடிவீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தையும், விதைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த மாதம் 16, 17, 18 ஆகிய திகதிகளில் தினமும் பிற்பகல் 1.30 மணி முதல் 4.30 மணி வரை பெற்றோர் சகிதம் வந்து மாணவர்கள் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தெரிவித்துள்ளது.

போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ்களும் சிறப்பாக வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொள்பவர்களுக்குச் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ‘13’ ஐ நீக்கினால்...

“13ஆவது திருத்தச்சட்டம் என்பது அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். அன்று முதல் இன்றுவரை அதனை நான் ஆதரித்துவருகின்றேன். வடக்கு, கிழக்கு மாகாணம் இணைந்திருந்த வேளை காணி அதிகாரம் தொடர்பில் எனக்கு கவலை இருந்தது. தற்போது அந்த கவலையும் இல்லை.

நான் 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஆதரிப்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் இருக்கிறேன் எனக் கருதிவிடவேண்டாம்.

தற்போதைய சூழ்நிலையில் 13 ஐ அமுல்படுத்தாவிட்டாலோ அல்லது மாகாணசபை முறைமையை இல்லாதொழித்துவிட்டாலோ இந்நாடு பற்றி எரியும். எனவே, 13 ஐ அடிப்படையாகக் கொண்டுதான் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண முற்பட வேண்டும். இந்த முயற்சியின்போது அரசியல் ‘கேம்’களுக்கு இடமளிக்க கூடாது.” – எனவும் டிலான் பெரேரா குறிப்பிட்டார்.

### மீண்டும் அரியணை...

– இவ்வாறு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“சஜித் பிரேமதாஸ தம்பட்டம் அடிப்பதாலோ அல்லது நாமல் ராஜபக்ஷ மேடையில் முழங்குவதாலோ அல்லது அநுரகுமார திஸாநாயக்க போராட்டக்காரர்களைத் தூண்டுவதாலோ ரணில் விக்கிரமசிங்க என்ற பெருந்தலைவரை வீழ்த்த முடியாது.

தற்போது ஜனாதிபதி பதவியில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் நாட்டுக்கான சேவையைத் திறம்படச் செய்து வருகின்றார். மக்கள் அவர் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளார்கள். அவர் அடுத்த தடவையும் ஜனாதிபதி கதிரையில் அமர்ந்து நாட்டு மக்களுக்கு முழு மூச்சுடன் பணியாற்றுவார்.” – என்றார்.

### மின்சாரக் கம்பியில்...

யானைகளிடமிருந்து வயலைப் பாதுகாப்பதற்காகப் போடப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கியே இந்தப் பெண் இன்று காலை உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ஹல்துமுல்ல, மலதோல, மெதகெதரவில் வசித்து வந்த 60 வயதுடைய ரத்நாயக்க முதியன்சேலாகே பொடிமணிகே என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாவார்.

தனது வயலைப் பாதுகாப்பதற்காகப் போடப்பட்டிருந்த மின்சாரக் கம்பியைத் தவறுதலாகத் தொட்டதில் இந்தப் பெண் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### இனவாதத்தைக் கக்கி...

அவர்கள் சம உரிமைகளைத்தான் கேட்கின்றார்கள். இன்னொரு போரை அவர்கள் விரும்பவில்லை.

இந்நிலையில், இனவாத, மதவாதக் கருத்துக்களைத் தெரிவித்து அவர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாம் என்று தெற்கு அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

இதை நான் சொல்வதால் எனக்கு எதிராகவும் விமர்சனங்கள் வரக்கூடும். அதை நான் பொருட்படுத்த மாட்டேன்.” – என்றார்.

### பல்கலைக்கழக மாணவன்...

கம்பஹா, மீரிகமை பிரதேசத்தைச் சேர்ந்த இந்த மாணவன், அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரணத்துக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை என்று இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### தெஹிவளை...

கேபிள் கம்பத்தில் மோதி அவர் மீது விழுந்ததால் அவர் உயிரிழந்துள்ளார்.

54 வயதுடைய செனரத் மாரகந்த என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று (15) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பலத்த காயங்களுக்குள்ளான அவர் களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் மாலை 5:30 மணியளவில் இறந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### சுகாதார அமைச்சுக்கு...

எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சம்பளத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள போராட்டக்காரர்கள் உரிய தீர்வுக்காக காத்திருக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஐந்து பிரதிநிதிகளுக்கு மட்டும் சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடலுக்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கட்டார் தேசிய கிரிக்கெட் அணிக்குத் தெரிவு




(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனையைச் சேர்ந்த முஹம்மட் அஹ்னாப் கட்டார் தேசிய கிரிக்கெட் அணிக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

சிறு வயது முதல் கிரிக்கெட்டில் ஆர்வம் கொண்டு பல துறைகளிலும் திறமையை காட்டி வந்த, கல்முனை அல் அஸ்ஹர் வித்தியாலயம் மற்றும் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவனும், கல்முனை லெஜன்ட் கழகத்தின் சொலிட் வெபன் என்று அழைக்கப் படும் முஹம்மட் அஹ்னாபின் உள்ளூர் கிரிக்கெட் பயணம் கல்முனை லெஜெண்ட்ஸ் அணியில் தொடங்கியதுடன், அவ்வணியின் பல்வேறு வெற்றிக்கு அடித்தளமிட்ட சிறந்த வீரராவார்.

இவரது கிரிக்கெட் விளையாட்டு மாவட்ட, மாகாண மட்டங்கள் மற்றும் தேசியத் தெரிவுகளில் முதன்மை காட்டி, கொழும்பு சாஹிரா கல்லூரி, கொழும்பு மோர்ஸ் அணி, மத்திய கிழக்கில் கட்டார் யுனைட்டெட் சலஞ்ஜெஸ் அணி என கட்டார் உள்ளகப் போட்டிகளில் பல திறமைகளைக் காட்டிய சிறந்த கிரிக்கெட் வீரராவார்.

## ஆலங்குள கிராமத்துக்கு உணவுப் பொருள்கள்



(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆலங்குள மக்களுக்கு ஒரு தொகுதி உலர் உணவுப் பொருள்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன.

கரித்தாஸ் கியுடெக், மட்டக்களப்பு மிசேரியோ நிறுவனத்தின் உதவியுடன் அருட்பணி அ.யேசுதாசன், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிரிடம் இவற்றைக் கையளித்தார்.





# உள்ளூராட்சி மன்ற சேவையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்

## இளைஞர்களுக்கான செயலமர்வு

(நூருல் ஹுதா உமர்)

ஆசிய மன்ற நிதி உதவியின் கீழ் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தால் நடைமுறைப் படுத்தப்படும் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் ஊடாக இளைஞர்களை வலுவூட்டும் செயற்றிட்டத்தின் செயலமர்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை பட்டினமும், சூழலும் பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபை பிரதம முகாமைத்துவ உதவியாளர் என். சிவகுமார் தலைமையில் இன்று (15) இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன பிரதம நிறைவேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகரவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன பிரதம செயற்பாட்டு அதிகாரி கலன வீரசிங்க நெறிப்படுத்தலில் இது நடைபெற்றது.

இந்த இளைஞர்களை தெளிவூட்டும் பயிற்சி செயலமர்வின் பிரதான வளவாளராக உள்ளூராட்சி மன்றங்களின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.ஐ.எம். வலீத் கலந்து கொண்டு உள்ளூராட்சி மன்றங்களின் தொழிற்பாடு, செயற்பாடு, உப சட்ட விதிகள், நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளித்தார் .

உள்ளூராட்சி சபைகளால் குடிமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் வழங்கப்படும் பொது சேவைகளை பகுப்பாய்வு செய்தல், அனைத்து குடிமக்களுக்கும் சமமான முறையில் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதும் இதன் முக்கியத்துவம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த பயிற்சி கலந்துரையாடலில் இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன உத்தியோகத்தர்கள், திருகோணமலை பட்டினமும், சூழலும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், சமூக பொது நிறுவன, இளைஞர் கழகங்களின் நிர்வாகிகள் உட்பட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# சாதனையாளர்கள் கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

கழக உறுப்பினர்களுக்கான பாராட்டு, சர்வதேச அளவில் சாதனை புரிந்த சிறுமிகளுக்கான கௌரவம் என்பன கடந்த வாரம் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்டன.

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இளம் வீரர்கள் மற்றும் கழகத்துக்கு இடையிலான ஒற்றுமையை வலுப்படுத்தல் வேலைத்திட்டமும் கழகத்தின் முகாமையாளர் எம்.எம். பஸ்மீரின் நெறிப்படுத்தலில் கழக தலைவர் எம்.பி.எம். பாஜில் தலைமையில் சாய்ந்தமருது அல்– ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கழகத்தினுடைய பிரதித்தலைவரான சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப், வித்தியாலய பிரதியதிபராக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற ஏ.எம்.ஏ. நிஸார், கழகத்தின் ஊடக செயலாளர் நூருல் ஹுதா உமர், ஆசிய சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த மற்றும் சர்வதேச அளவில் சாதனை புரிந்த சிறுமிகள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் சாய்ந்தமருது பொதுநிறுவனங்கள் சம்மேளன தலைவர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். பரீட் , சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினரும், தொழிலதிபருமான ஏ.எல். உதுமாலெப்பை, தொழிலதிபர் யூ.எல். சப்ரி, கழக செயலாளர் ஏ.சி.எம்.நிஸார், கழக நிர்வாகிகள், கழக வீரர்கள், சாதனை சிறுமிகளின் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## 13இற்குப் பதில் புதிய அரசமைப்பா?

அரசமைப்பின் 13 ஆவது திருத்த நடைமுறை யாக்கம் தொடர்பில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கருத்து நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார். அதற்கான காலக்கெடு நேற்றுடன் - 15 ஆம் திகதி யுடன் - முடிவடைந்துருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்கும் அரசின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவே இந்தக் கோரிக்கைக்குப் பதில் அளிக்கவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷவின் எஞ்சிய பதவிக் காலத்தை நிறைவு செய்ய வந்தவரே ரணில் விக்கி ரமசிங்க. அவருக்கு மக்களின் நேரடி ஆணை எதுவும் கிடையாது. எனவே கோட்டாபய ராஜபக்ஷ பெற்ற மக்கள் ஆணைக்கு அப்பால் சென்று 13 இன் நடை முறையாக்கம் மற்றும் அது, இது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்நகரக் கூடாது, முன்நகர முடியாது என்பதுதான் பொதுஜன பெரமுனவின் பொதுவான நிலைப்பாடு என்பது கண்கூடு.

இத்தகைய கருத்தியல் தென்னிலங்கை அரசியலில் இப்போது வலுத்து வருவதும் வெளிப்படையானது.

13 இன் நடைமுறையாக்கம் குறித்து அதிகம் பேசும் ஜனாதிபதி ரணிலுக்கே அதற்கான நேர்மையான - உளப்பூர்வமான - எண்ணமோ திட்டமோ உண்டா என்பது கூடக் கேள்விக்குறியே.

ஆனால் ஜனாதிபதி ரணிலின் கோரிக்கைக்கு உரிய பதிலை வேறு வடிவத்தில் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஆளும் மொட்டு கட்சிக்குள் இருந்து இப்போது வெளிப்பட்டிருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி யேற்றதும் புதிய அரசமைப்பு உருவாக்கம் ஒன்றுக் காக நிபுணர் குழுவை நியமித்திருந்தார். ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான இந்தக் குழு கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை விட்டு விலகுவதற்கு இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர்தான் தனது அறிக்கையை - நகல் அரச மைப்பை - அவரிடம் ஒப்படைத்திருந்தது.

அதனையே தனது யோசனைத் திட்டமாக மொட் டுக்கட்சி இப்போதும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் கையளிக்க வேண்டும் என்று மொட் டுக் கட்சியின் எம்.பியான கெவிந்து குமாரதுங்க வலியுறுத்துகின்றார்.

தன்னுடைய சொந்த முயற்சியில் தயாரான புதிய அரசமைப்புத் திட்டம் குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இனிமேலும் மௌனம் காக்க கூடாது, அதை முன்னுறுத்தி அரசியல் காய் நகர்த்தலை மேற் கொள்ள அது களமிறங்க வேண்டும் என்று கெவிந்து குமாரதுங்க வலியுறுத்துகின்றார்.

மேற்படி புதிய அரசமைப்பு நிபுணர் குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் - அதன் தலை வர் ரொமேஷ் டி சில்வா உட்பட - 13 ஆம் திருத் தத்தையோ, மாகாண சபை முறைமையையோ ஏற்கவே இல்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டும்

# வீதிகளுக்குப் பெயர்ப் பலகை அமைத்துத் தருமாறு கோரிக்கை

**(ஏயெஸ் மௌலானா)**

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வீதிகளுக்கும் குறுக்குத் தெருக்களுக்கும் பெயர்ப் பலகை களை அமைக்குமாறு சாய்ந்தமருது கல்வி, சமூக, கலாசார அபிவிருத்தி மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்முனை மாநகர சபைப் பிரதேசங்களில் நீண்ட காலங் களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த வீதிப் பெயர்ப் பலகைகள் சேதமடைந்தும் அழிவடைந்தும் காணப்படு கின்றன. சில வீதிகளின் பெயர்ப் பலகைகள் இருந்த இடமும் இல்லாமல் போயுள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு சில மாதங்களுக்கு முன்னர் இப்பிரதேசங்களில் உள்ள வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான சில பெரிய வீதி களுக்கு மாத்திரம் பெயர்ப் பலகைகள் இடப்பட்டுள்ளன. எனினும் மாநகர சபைக்கு சொந்தமான வீதிகளுக்கு இன்னும் பெயர்ப் பலகைகள் அமைக்கப்படவில்லை.

பெரும்பாலான வீதிகளுக்கு பெயர்ப் பலகை இல்லாத காரணமாக வெளியிடங்களில் இருந்து வருகை தரும் பயணிகள் மாத்திரமல்லாமல் உள்ளூர் மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பொது மக்கள் தமது வசிப்பிடத்தை அடையாளப் படுத்துவதற்கு வீதியின் பெயரையே குறிப்பிட்டுக் கூறுவர். ஆனால் ஏனையோர் அதனை புரிந்து கொள்வதற்கு, குறித்த வீதியின் பெயரை அறிந்திருக்க வேண்டும். அதனை அவ்வீதியின் பெயர்ப் பலகையைக் கொண்டே அவர் களால் அறிந்து கொள்ள முடியும்.

ஆகையால் இனியும் காலம் தாமதிக்காமல் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அனைத்து வீதிகளுக்கும் ஒழுங்கை களுக்கும் பெயர்ப் பலகைகளை இடுவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு அந்த அமைப்பு வலியுறுத்தி யுள்ளது.

# தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் 10 மாணவர்களுக்குத் தங்கப் பதக்கம்

**( வி.ரி. சகாதேவராஜா)**

கல்வி அமைச்சு நடத்திய தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் 10 மாணவர்களுக்கு இந்த முறை தங்கப் பதக்கம் கிடைத்துள்ளளது.

இந்தப் பரீட்சை அண்மையில் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்றது. பரீட்சையில் வெற்றிகரமாக சித்தி அடையும் மாணவர்கள் வெளிநாட்டு பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்படுவது வழமை.

இந்த முறை இடம் பெற்ற பரீட்சையில் பத்து மாண வர்கள் தங்கப் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ள னர்.

பிரிவு ஒன்று – எஸ் அத்துகோரல (கொழும்பு ஆனந்த கல்லூரி -6- 70புள்ளிகள்), டி.எஸ்.பிரித்திக்ஷி (சென் மேரிஸ் கல்லூரி திருகோணமலை -6- 60 புள்ளிகள்), ஜி .அஸ்வின் (திருகோணமலை கோணேஸ்வரா இந்து கல்லூரி -6- 57).

பிரிவு இரண்டு – ஆர். ஆரூரன் (அளவெட்டி அருணோ தயா கல்லூரி -8- 50புள்ளிகள்), எஸ்.நிஜோதிகா விபுலா னந்தா (மல்வத்தை மத்திய கல்லூரி-8-45 புள்ளிகள்), ஜி.ரத்நாயக (பதுளை மத்திய கல்லூரி-9- 45 புள்ளி கள்).

பிரிவு மூன்று – ஏ .அஹமட் (இரத்னபுரி சிவாலி மகா வித்தியாலயம் -11- 78), ஜே.லவீந் (வவுனியா தமிழ் மகாவித் தியாலயம் -10- 78 புள்ளிகள்), ஜி .சாந்தித்யன் (சாவ கச்சேரி இந்து கல்லூரி -9-76 புள்ளிகள்), எஸ். கலாபன் (யாழ்ப்பாணம் இந்து கல்லூரி -11- 76 புள்ளிகள்).

இந்தப் பத்து மாணவர்களில் ஏழு மாணவர்கள் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் ஆவர். வடக்கிலி ருந்து நால்வரும் கிழக்கிலிருந்து மூவரும் தெரிவாகி யுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இலைக்கஞ்சி இல்லம் நிகழ்வு

(எஸ்.அஷ்ரப்கான்)

"இஸ்லாமாபாத்தின் இலைக் கஞ்சி இல்லம்-2023" என்னும் நிகழ்வு கல்முனை இஸ்லாமாபாத் வித்தியா லயத்தில் பாடசாலை அதிபர் ஏ.ஜி. ஏ.றிசாத் தலைமையில் இடம்பெற் றது.

ஆரம்பக் கல்விப் பகுதித் தலைவர் டி.கே.எம்.மௌசீன் ஆலோசனையுடன் தரம் 4 வகுப்பாசிரியை எஸ்.றுஸ்தா பர்வினின் வழிகாட்டலின் கீழ் நேற்று (14) இது நடைபெற்றது.



கல்முனை இஸ்லாமாபாத் வித்தி யாலயத்தில் தரம் 04 சுற்றாடல் பாடத் தின் எமது உணவு அலகின் "தர மானதும் மருத்துவத்தன்மை கொண்ட துமான பானவகைகளை நுகரப் பழகுவார்" எனும் தேர்ச்சியினூடாக "இலைக்கஞ்சியை" மாணவர்க ளுக்கு அறிமுகம் செய்யும் நோக்குடன் இந்த நிகழ்வு பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப் பாளர் எம்.எச். றியாஸா விஷேட அதிதி யாக கலந்துகொண்டார்.



# சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவு முன்னேற்ற மீளய்வுக்கூட்டம்

(நவாஸ் )

அம்பாறை மாவட்ட செயலகத் தில் சமுர்த்திப் பிரிவால் வழங்கப்பட்டு வரும் சமூகப் பாதுகாப்பு கொடுப் பனவு சம்பந்தமான முன்னேற்ற மீளய்வுக்கூட்டம் மாவட்ட பணிப் பாளர் எம்.எஸ்.எம்.ஸப்றாஸ் தலைமை யில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற் றது.

இதில் மாவட்டத்திலுள்ள 22 பிர தேசசெயலக உத்தியோகத்தர்க ளும் முகாமையாளர்களும் கலந்து கொண்டனர்.

மாவட்த்திலுள்ள சமுத்தி பெறும் குடும்பங்களுக்கு பிறப்பு, திருமணம், நோய் மரணம், சிப்தொர புலமைப் பரிசில் என அதிகமான பணம் அம் பாறை மாவட்டமே வழங்கியுள்ளது என்றும் தேசிய ரீதியில் அம்பாறை மாவட்டமே முதலிடத்தில் உள்ளதாக வும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட முகா மையாளர் அஜித் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் திரு மதி சௌமியா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



# கிழக்கு மாகாண சதுரங்க போட்டியில் கல்முனை மஹ்மூத்க்கு இரு இடங்கள்

(அ.அஸ்வர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக் கிடையிலான சதுரங்க போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவிகள் 17 வயதுக்கு உட்பட்ட பிரிவில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் நடைபெற்ற மாகாண மட்ட சதுரங்க போட்டியில் இவர்கள் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாகாணமட்ட சதுரங்க போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவிகளை கௌரவப்படுத்தக் கல்லூரி சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு வைபவம் நேற்று (14) கல்லூரியின் அதிபர் யூ.எல்.எம். அமீன் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலய கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் கலந்து கொண்டார்.

சாதனை மாணவிகள் கல்லூரி முன்றலில் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்று அழைத்து வரப்பட்டனர். அத்துடன் வெற்றிப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் பிரதி அதிபர் (நிருவாகம்) சமதா மசூது லெவ்வை, உதவி அதிபர்களான ஏ.எச். நதீரா, எம்.எஸ். மனுனா, என்.டி. நதீகா, விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், பொறுப்பாசிரியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் சதுரங்க போட்டிகளுக்கு மாணவிகளை பயிற்றுவித்த சாஹிறா கல்லூரியின் ஆசிரியர்களான எம்.வை.எம்.றகீப், எஸ்.எல்.எம். சுஹ்தான் ஆகியோர் விஷேடமாக அழைக்கப்பட்டு பாராட்டப்பட்டனர்.



# சின்னமுத்து தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள அறிவுறுத்து

## காதார வைத்திய அதிகாரி வேண்டுகோள்

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் தற்போது சின்னமுத்து நோய் சிறுவர்களிடயே வேகமாகப் பரவி வருவதால் குழந்தை பிறந்து 09 மாதங்கள் மற்றும் 03 வயதில் போடப்படும் தடுப்பு ஊசி ஏற்றிக்கொள்ளதவர்கள் உடனடியாக ஏற்றிக் கொள்ளுமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் பொது மக்களை கேட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

திங்கட்கிழமைகளில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையிலும், செவ்வாய்க்கிழமைகளில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும், புதன்கிழமைகளில் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சின்னமுத்து நோயிலிருந்து உங்கள் பிள்ளைகளை பாதுகாத்து கொள்ள இந்த தடுப்பூசியை நீங்கள் பிள்ளைகளுக்கு உரிய வயதில் ஏற்றிக் கொள்ள வேண்டும் என்றும் பொதுமக்களை அவர் கேட்டுள்ளார்.



# திருடரை வைத்து அரசியல் செய்ய நான் ஒருபோதும் விரும்பவில்லை

## இதனாலேயே ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை என்கிறார் சஜித்

**(13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான தனது நிலைப் பாட்டை மகாசங்கத்தினர் முன்னிலையில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அவரது உரையின் முழுவடிவம்)**

நான் ஏன் ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை என பலரும் விமர்சிக்கின்றனர். திருடர்களை வைத்து அரசியல் செய்ய வேண்டும் என்ற அச்சத்தாலும், வெட்கத்தாலும்தான் ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை . புதிய ஆணையின்றி நாட்டின் பொறுப்பை ஏற்க மாட்டேன்.

பலரும் பேசிக் கொண்டிருக்கும் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் இன்றும் நாளையும் ஒரே நிலைப்பாட்டையே நாம் கொண்டுள்ளோம். ஒன்றித்த நாட்டுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம்.

ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம். நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்துக்கும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டும். இன்று இவை அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கின்றன.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

விழுமியமிக்க சமூகத்துக்கான பிக்குகள் ஆலோசனை பேரவையின் இரண்டாம் கட்டம் நேற்று (15) காலி மாவட்டத்தை இலக்காக் கொண்டு காலி நகரசபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு–

நாட்டில் 10 ஆயிரத்து 89 இற்கும் மேற்பட்ட விகாரைகளும்,10 ஆயிரத்து 18 இற்கும் மேற்பட்ட தஹம் அறநெறிப் பாடசாலைகளும் 800 இற்கும் மேற்பட்ட பிரிவினாக்களும் உள்ளன. ஒவ்வொரு மதஸ்தான நிறுவனங்களின் ஆற்றலை சமய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மாற்றும் வகையில் செயல்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும்.

கடந்த கால ஆட்சியாளர்களின் பணியாற்றுகைகளைப் பார்த்து ஐக்கிய மக்கள் சக்தியின் பயணத்தை மதிப்பிட வேண்டாம் என்று மகாசங்கத்திடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களிலும் சமய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

இளைஞர்களுக்கான மையமாகவும், மத நல்லிணக்கத்துக்கான இடமாகவும், மேம்பட்ட படித்த நவீன தலைமுறையின் இடமாகவும், தொழில்நுட்ப ஆற்றல் வாய்ந்த தலைமுறையினரின் மையமாகவும் மத வழிபாட்டுத் தலங்களை உருவாக்க வேண்டும் .

நவீனத்துவப் பார்வையின் மூலம், அனைத்துப் விடயப் பரப்புகளுக்குமான கொள்கை வகுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கொள்கை வகுப்பாக்கங்களை தயாரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.பௌத்த அறநெறிக் கல்வியை மேம்படுத்த விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளளது.

விகாரைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மத வழிபாட்டுத் தலங்களில் சூரிய மின்சக்தித் திட்டத்தை வெறுமனே கூறாமல் யதார்த்தமாக நடைமுறைப் படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப் பட்டு வருகின்றன.

ஒன்றித்த நாட்டுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம். ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம. நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்துக்கும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள விசேட இடம் எப்போதும் பாதுகாக்கப்படும். ஏனைய மதங்களும் சமயங்களும் பாதுகாப்பாக இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் பிளவு ஏற்பட்டால், நாட்டின் தேசிய பாதுகாப்பு பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. அந்தப் பிரிவினையை இல்லாதொழிக்க வேண்டும்.

நாட்டின் ஒருமைப்பாட்டிற்காக அனைத்து மக்கள் சமூகங்களும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கி ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் செயற்படும்.

மதத்தின் மீதும் அதன் போதனைகளின்மீதும்உண்மையானஅன்புகொண்ட கட்சியாக செயல்படும் பாதையில் நாங்கள் பயணிக்கிறோம.

நான் ஏன் ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை என பலரும் விமர்சிக்கின்றனர். திருடர்களை வைத்து அரசியல் செய்ய வேண்டும் என்ற அச்சத்தாலும், வெட்கத்தாலும்தான் ஜனாதிபதி பதவியை ஏற்கவில்லை. புதிய ஆணையின்றி நாட்டின் பொறுப்பை ஏற்க மாட்டேன். மகா சங்கத்தினரின் ஆசிர்வாதங்களை பெற்றுக் கொண்டு கொள்கைகளை மதித்து கொள்கைசார் தூய்மையான பயணத்தை மேற்கொள்ளத் தயார். –என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# முதல்வர் ஸ்டாலின் நீட் தேர்வை வைத்து அரசியல் செய்கிறார்!

## - அண்ணாமலை குற்றச்சாட்டு



முதல்வர் ஸ்டாலின் நீட் தேர்வை வைத்து அரசியல் செய்வதால் மாணவர்களின் தன்னம்பிக்கை பாதிக்கப்படுகிறது என பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

கன்னியாகுமரிக்கு சென்றுள்ள பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை நேற்று காந்தி நினைவு மண்டபத்தில் மரியாதை செலுத்திய பின்னர், 'என் மண், என் மக்கள்' நடைபயணத்தை தொடங்கினார். பேருந்து நிலையம் முன்பு தேசிய கொடி ஏற்றி வைத்து, சமாதான புறாவை பறக்கவிட்டார். இதன்போது உரையாற்றிய அவர்,

தற்போது அனைத்து தரப்பு மக்களும் நீட் தேர்வில் வெற்றிபெற்று மருத்துவம் படித்து வருகின்றனர்.

நீட் யாருக்கு எதிரானது என்பதை புள்ளி விவரங்களை வெளியிட்டு தி.மு.க. விளக்க வேண்டும். முதல்வர் ஸ்டாலின் இதனை வைத்து அரசியல் செய்கிறார். இதனால் மாணவர்களின் தன்னம்பிக்கை பாதிக்கப்படுகிறது. குழந்தைகளின் அறிவுத்திறனை பொறுத்து என்ன படித்தால் மேன்மை பெற முடியும் என்பதை பார்க்க வேண்டும். பெற்றோரின் கனவை குழந்தைகள் மீது திணிப்பது தவறு. வேங்கைவயல் மற்றும் நாங்குநேரி விவகாரத்தில் பல கட்சியினர் மவுன விரதத்தில் உள்ளனர்.

சாதிய வன்முறைகளுக்கு எதிராக கடுமையான சட்டங்களை உருவாக்க வேண்டும். தி.மு.க. அமைச்சர்களே பல இடங்களில் சாதி வன்மத்தை கடைபிடிக்கின்றனர். நாங்குநேரியில் இவ்வளவு பெரிய சம்பவம் நடந்த பிறகும் வீட்டில் இருந்து முதல்வர் படம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அ.தி.மு.க. பொன்விழா மாநாடு மிக சிறப்பாக நடக்க எங்களது வாழ்த்துகள். பிரதமராக இருந்த இந்திரா காந்தியை கைது செய்தபோது, காங்கிரஸ் கட்சியினர் கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிகோட்டில் கர்ப்பிணி பெண், குழந்தை உட்பட 9 பேரை பேருந்தில் உயிரோடு கொளுத்தினார்கள். இன்றைக்கு நாடெல்லாம் பிரிவினைவாதத்தை வளர்த்து கொண்டிருக்கின்றனர் என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

# அரச காணியை அபகரித்த நித்தியானந்தாவின் சீடர்கள்!



நித்தியானந்தாவின் சீடர்களால் அபகரிக்கப்பட்ட 30 கோடி ரூபா பெறுமதியான அரசு நிலம் மீட்கப்பட்டுள்ளது.

பல்லாவரம், திரிசூலம் பகுதியில் உள்ள பச்சையம்மன் கோயில் தெருவில் அரசுக்கு சொந்தமான சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவு உள்ள மலை புறம் காணி உள்ளது. 30 கோடி ரூபா மதிப்பிலான இந்த நிலத்தை நித்தியானந்தா குழுமத்தினர் சுமார் 7 ஆண்டுகளாக ஆக்கிரமித்து அனுபவித்து வந்தனர்.

அதே போன்று அந்த நிலத்தை வேறு சிலரும் ஆக்கிரமித்து அதில் வீடு கட்டி வசித்து வந்துள்ளனர். இதனால் இரு தரப்புக்கும் இடையே மோதல் நிலவி வந்தது. இதையறிந்த செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ஆ.ர. ராகுல்நாத் உத்தரவின்பேரில், ஆக்கிரமிப்பாளர்களுக்கு இதுதொடர்பாக ஏற்கெனவே கடிதம் வழங்கப்பட்டு இருந்தது.

இருந்த போதிலும் அவர்கள் ஆக்கிரமிப்பு நிலத்தை கைவிட மறுத்ததால், நேற்று பல்லாவரம் வட்டாட்சியர்ட்டி. ஆறுமுகம் தலைமையிலான வருவாய் துறையினர், பொலிஸார் முன்னிலையில் அரசு நிலத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த சுற்றுச் சுவர் முழுவதும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. பின்னர் தனியார் வசம் இருந்த குறித்த காணி மீட்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆக்கிரமிப்பு அகற்றும் பணிகளில் ஈடுபட்ட அதிகாரிகள் கூறும் போது, யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் அரசுக்கு சொந்தமான நிலம் மீட்கப்பட்டது. இதன் சந்தை மதிப்பு 30 கோடி இந்திய ரூபா இருக்கும் என்று தெரிவித்தனர்.

# கொடியேற்ற விடாமல் தடுக்கப்பட்டார் ஜெ.தீபா!

போயஸ் தோட்ட இல்லத்தில் ஜெ.தீபாவை கொடியேற்ற விடாமல் தடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னை போயஸ் தோட்டத்தில் உள்ள வேதா இல்லத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வசித்து வந்தார். அவரது மறைவையடுத்த பல்வேறுகட்ட நிகழ்வுகளுக்கு பின்னர், இந்த வீடு உயர் நீதிமன்ற உத்தரவுப்படி ஜெயலலிதாவின் அண்ணன் மகளான ஜெ.தீபா மற்றும் அவரது சகோதரர் தீபக் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிலையில், சுதந்திர தினத்தையொட்டி, வேதா இல்லத்தில் ஜெ.தீபா தேசியக் கொடி ஏற்றச் சென்றார். அப்போது அங்கு கொடியேற்றக் கூடாது என அவரது சகோதரர் தீபக் தகராறு செய்துள்ளார். இதையடுத்து சிறிது நேர சலசலப்புக்கு பின்னர் தீபா தேசியக் கொடியை ஏற்றியுள்ளார்.

# உக்ரைனில் வாக்னர் கூலிப்படையால் பிரித்தானிய ஊழியர்கள் படுகொலை!



உக்ரைன் போர் சூழலில் பொது மக்களுக்கு உதவும் பொருட்டு களமிறங்கிய பிரித்தானிய ஊழியர்கள் இருவர் ரஷ்யா அல்லது வாக்னர் கூலிப்படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

பிரித்தானியர்கள் இருவரும் பக்மூத் பிராந்தியத்தில் பொதுமக்களை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில், இருவர் தொடர்பில் எந்த தகவலும் இல்லை என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதனை தொடர்ந்து இருவரின் ஆவணங்களையும் வாக்னர் கூலிப் படையினர் இணையத்தில் வெளியிட்டுள்ளனர்.

பிரித்தானிய உள்விவகார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில், மனிதாபிமான உதவிகள் மேற்கொண்டுவந்த இரு பிரித்தானியர்களும் கொல்லப்பட்டனர் என குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், பிரித்தானியர்கள் இருவரும் சண்டையில் கொல்லப்பட்டதாக கூறப்பட்ட நிலையில், ரஷ்ய ஆதரவு வாக்னர் கூலிப்படையினரால் இருவரும் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

பிரித்தானியர்கள் இருவரும் கொல்லப்பட்ட விவகாரம் போர் குற்ற நடவடிக்கை என்றும் உயிரிழந்தவர்களின் குடும்பம் தெரிவித்துள்ளது

மேலும், போர் குற்றம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை முன்னெடுக்கும் பொருட்டு, 1.3 மில்லியன் பவுண்டுகள் நிதி அளிக்கப் பட்டுள்ளதாகவும் நியூசிலாந்து பிரதமர் கிறிஸ் ஹிப்கின்ஸ் தெரிவித்துள்ளார்.

## ரஷ்ய எல்லையில் பறந்த நோர்வே இராணுவ விமானம் விரட்டியடிப்பு!



நோர்வே இராணுவ ரோந்து விமானம் ஒன்று பாரன்ட்ஸ் கடல் மீது பறந்து ரஷ்ய எல்லையில் நுழைய முயன்றதாகவும் அதனை ரஷ்ய விமானப்படையின் மிக் 29 போர் விமானம் விரட்டியடித்ததாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், ரஷ்யாவின் போர் விமானம் எதிர்கொண்டதையடுத்து நோர்வே விமானம் வந்த வழியே திரும்பிச் சென்று விட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் விமானம் போசெய்டன் ரோந்து விமானம் என்று அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது. மேலும், நேட்டோ உறுப்பு நாட்டுக்கும் ரஷ்யாவுக்குமான இராணுவ ரீதியான மோதல் ஏற்பட்டால் அது மிகப்பெரிய யுத்தத்திற்கான தொடக்கமாக இருக்கும் என கூறப்படுகின்றது.

## காட்டுத் தீ: பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்!

அமெரிக்காவின் ஹவாயில் தீவில் ஏற்பட்ட காட்டுத் தீயில் பாதிக்கப் பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளை விரைவுப்படுத்துமாறு அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த பகுதிக்கு விஜயம் மேற் கொண்டுள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஹவாய் தீவுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் ஆளுநர் ஜோஷ் கிரீனிடம் இதன்போது உறுதியளித்துள்ளார். அமெரிக்காவில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு கள ஆய்வையும் அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் இன்று முன்னெடுத்துள்ளார்.

## ஒமிக்ரோனை கட்டுப்படுத்த புதிய தடுப்பூசி!

ஒமிக்ரோனை கட்டுப்படுத்த புதிய கொரோனா தடுப்பூசி அறிமுகப் படுத்தப்படவுள்ளது என அமெரிக்க சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்காவில் 240 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் குறைந்தபட்சம் ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பூசியை 50 மில்லியனுக்கும் குறைவான மக்களே பெற்றுள்ளனர்.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அழகில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949